# பொருள் மயக்கம்

### இடைவெளியும் பொருள் வேறுபாடும்

| | |
|---|---|
| எம் மொழி யார்க்கும் எளிது | எம்மொழியார்க்கும் எளிது |
| அப் பாவின் நலங் காண்க | அப்பாவின் நலங் காண்க |
| ஐந்து மாடி வீடு | ஐந்துமாடி வீடு |
| அன்று முதல் பாடம் கற்றோம் | அன்று முதல்பாடம் கற்றோம் |

### வல்லின மெய்களும் பொருள் வேறுபாடும்

| | |
|---|---|
| பிட்டுத் தின்றான் (பிய்த்துத் தின்றான்) | பிட்டு தின்றான் (பிட்டு என்னும் உணவு தின்றான்) |
| உள்ளக் கருத்து (மனதின் கருத்து) | உள்ள கருத்து (நிலவும் கருத்து) |
| ஈட்டிக் கொண்டு வந்தான் (பொருள் சம்பாதித்து கொண்டு வந்தான்) | ஈட்டி கொண்டு வந்தான் (ஈட்டி என்னும் ஆயுதத்தை கொண்டு வந்தான்) |

### காற்புள்ளியும் பொருள் மயக்கமும்

**எ.கா;**

- **அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்** – அந்தப்பெண் தனது அக்கா வீட்டுற்குச் சென்றாள் என்பது பொருளாகும்.
- **அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்** – அந்தப்பெண்ணிண் அக்கா, தனது வீட்டிற்குச் சென்றாள் என்பது பொருளாகும்.

### இடைச்சொற்களும் பொருள் மயக்கமும்

| | |
|---|---|
| **விடும்** | 1. தன் தவற்றினை உணர்ந்துவிடுவானாயின் நன்று.<br>2. தன் தவற்றினை உணர்ந்து விடுவானாயின் நன்று. |
| **தன்** | 1. பாண்டியன்தன் கவிதையைப் படித்தான்<br>2.பாண்டியன் தன் கவிதையைப் படித்தான் |
| **தான்** | 1. கண்ணன்தான் எழுதுவதாகச் சொன்னான்<br>2.கண்ணன் தான் எழுதுவதாகச் சொன்னான் |
| பற்றி | 1. குகன் இராமனைப்பற்றிக் கூறினான்<br>2.குகன் இராமனைப் பற்றிக் கூறினான் |
| முன் | 1. சில குறைகளை மக்கள் முன்வைத்தனர்<br>2.சில குறைகளை மக்கள்முன் வைத்தனர் |
| பால் | 1. அவன்பால் கொண்டு சென்றான்<br>2.அவன் பால் கொண்டு சென்றான் |
| கண் | 1. அவன்கண் பெற்று மகிழ்ந்தான்<br>2.அவன் கண்பெற்று மகிழ்ந்தான் |
| படி | 1. அளக்கும்படி வேண்டினான்<br>2.அளக்கும் படி வேண்டினான் |
| மூலம் | 1. அதன்மூலம் கண்டுபிடிக்கப்பட்டது<br>2.அதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது |
| கூட | 1. அவன்கூடக் கொடுத்தான்<br>2.அவன் கூட கொடுத்தான் |

### சொல்லுருபும் பொருள் மயக்கமும்

வீட்டிலிருந்து சென்றான்;

வீட்டில் இருந்து சென்றான்.

### சொற்களை மாற்றி எழுதும் போது உண்டாகும் தவறுகள்

| | |
|---|---|
| ஆண்டுதோறும் மறைந்த தி.ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும். | தவறு |
| மறைந்த தி. ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும். | சரி |
| இராமனுடன் இலக்குவனும் காட்டிற்கு பணிவிடை செய்யப் புறப்பட்டான். | தவறு |
| பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் காட்டிற்கு புறப்பட்டான். | தவறு |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான். | தவறு |
| இராமனுக்கு பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்கு புறப்பட்டான். | சரி |

**முதலாம் தொடர்**

இராமனும் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப்போவதாக பொருள் அமைந்துள்ளது.

| விதிகள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|
| பண்புத்தொகை, வினைத்தொகையாக வரும் சொற்கள் **ஒரு சொல்** தன்மை கொண்டவை. எனவே பிரித்து எழுதக்கூடாது. | செங்கடல் சரி<br>செங் கடல் தவறு<br>கத்து கடல் தவறு<br>கத்து கடல் தவறு |
| பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றிற்கு இடையில் நின்று பொருளைத் தெளிவாக உணர்த்தி நிற்கும் **இடைச்சொற்களைச்** சேர்த்து எழுத வேண்டும். | அணங்குகொல் சரி<br>அணங்கு கொல் தவறு |
| **இடைச்சொல்லுடன்** சொற்களை சேர்த்தே எழுத வேண்டும். | பேசியபடி பணம் கொடுத்தான் (பேசியவாறு)<br>பேசிய படி பணம் கொடுத்தான் (படியளவு) |
| **உடம்படுமெய்களை** சேர்த்து தான் எழுத வேண்டும். | மணியடித்துச் சென்றான் (ஒலி எழுப்புதல்)<br>மணி அடித்துச் சென்றான் (மணி |
| உரிச்சொற்களைப் பெயருடனும் | கடிமணம் சரி<br>கடி மணம் தவறு |

**இரண்டாம் தொடர்**

யாரோ ஒருவருக்கு பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவன் செல்வதாகப் பொருள் அமைந்துள்ளது.

**மூன்றாம் தொடர்**

காட்டிலுள்ள இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவன் செல்வதாகப் பொருள் அமைந்துள்ளது.

| | |
|---|---|
| | என்பவன் யாரையோ அடித்தான்) |
| பன்மையை உணர்த்தும் கள் விகுதியைப் பிரிக்காமல் எழுத வேண்டும். | ஈக்கள் மொய்த்தன சரி<br>ஈக்கள் மொத்தன தவறு<br>குரங்குகள் உண்டன சரி<br>குரங்கு கள் உண்டன தவறு |
| இரட்டைக்கிளவிச் சொற்களைப் பிரிக்காமல் எழுத வேண்டும். | படபடவெனச் சிறகை அடித்தது சரி<br>படபட என சிறகை அடித்தது தவறு |
| சொற்புணர்ச்சியில் நிலைமொழியின் ஈற்றெழுத்து மெய்யெழுத்தாகவும் வருமொழி முதல் எழுத்து உயிர் எழுத்தாகவும் இருந்தால், அவற்றைச் சேர்த்தே எழுத வேண்டும். | சுடராழி சுடர் + ஆழி |



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| வினையுடனும் பயன்படுத்தும் போது சேர்த்தே எழுதவேண்டும். | |
| உம்மைத்தொகைச் சொற்கள், நேரினைச் சொற்கள், எதிரினைச் சொற்கள் ஆகியவற்றை சேர்த்தே எழுத வேண்டும். | உற்றாருறவினர் சரி<br>உற்றார் உறவினர் தவறு<br>சீரும் சிறப்பும் சரி<br>சீரும் சிறப்பும் தவறு<br>மேடுபள்ளம் சரி<br>மேடு பள்ளம் தவறு |
| வினைத்தொகை சொல்லுக்கு இடையே வல்லினம் மிகக் கூடாது. | திருவளர்ச்செல்வன் / செல்வி சரி<br>திருவளர்ச்செல்வன் / செல்வி தவறு<br>திருநிறைச்செல்வன் / செல்வி சரி<br>திருநிறைச்செல்வன் / செல்வி தவறு |
| தண்ணீர் என்றால் தன்மை கூட்டல் நீர் குளிர்ந்த நீர் என்று பொருளாகும். சுடுதண்ணீர் என்றால் எழுதினால் சூடும் குளிரும் சேர்ந்த தண்ணீர் என்று தவறான பொருள் அமைந்து விடும். | சுடுதண்ணீர் தவறு<br>சுடுநீர் சரி |

www.tnpscgroup4.in